RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in

DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 119 | மே.6 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# புதிய அரசு பதவியேற்பு குறித்து தலைமைச் செயலாளர், டிஜிபி, அதிகாரிகள் ஆலோசனை



சென்னை: மே.6-

தமிழகத்தில் புதிதாக அரசு பொறுப்பேற்கவுள்ள நிலையில், தலைமைச் செயலாளர் மற்றும் டிஜிபி ஆகியோர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சாய்குமார், உள்துறை செயலாளர் மணிவாசன், காவல் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் மற்றும் சென்னை காவல் ஆணையர் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. இதனையடுத்து தவெகவின் சட்டமன்றக் குழு தலைவராக அக்கட்சியின் தலைவர் விஜய் இன்று ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தச் சூழலில், ஆட்சியமைக்க உரிமை கோரி ஆளுநருக்கு விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

தவெக தலைமையிலான புதிய அரசு அமையவுள்ள நிலையில், பதவியேற்பு விழா மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்க இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சாய்குமார், உள்துறை செயலாளர் மணிவாசன், காவல் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உள்ளிட்ட பல்வேறு உயர் அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.

## புஸ்ஸி ஆனந்த்... அன்று புதுச்சேரி எம்எல்ஏ, இன்று தமிழக எம்எல்ஏ!



புதுச்சேரி: மே.6-

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் அதிக இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உயர்ந்துள்ளது. கட்சியின் தலைவரான விஜய் விரைவில் தமிழக முதல்வராக பதவியேற்க உள்ளார்.

இந்நிலையில், தவெக பொதுச் செயலாளரான புஸ்ஸி ஆனந்த், சென்னை தியாகராய நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். இதற்கு முன்னதாக புஸ்ஸி ஆனந்த் புதுச்சேரி மாநிலத்தில் கடந்த 2006ம் ஆண்டு புஸ்ஸி தொகுதியில் முன்னாள் அமைச்சர் கண்ணன் கட்சியான புதுச்சேரி முன்னேற்ற காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று எம்எல்ஏவாக இருந்தவர்.

விஜய் கட்சி தொடங்கியவுடன் தனது வாக்கை செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கர் தொகுதிக்கு இடமாற்றம் செய்து கொண்டார் புஸ்ஸி ஆனந்த். இப்போது தமிழகத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். இதன் மூலம் புஸ்ஸி ஆனந்த்துக்கு 2 மாநிலங்களில் எம்எல்ஏவாக தேர்வு செய்யப்பட்டவர் என்ற பெருமை கிடைத்துள்ளது.

## காட்பாடியில் வரலாற்று சாதனை வாய்ப்பை இழந்த துரைமுருகன்

வேலூர்: மே.6-

திமுக பொதுச் செயலாளர் துரை முருகன் 13வது முறையாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றால் வரலாற்று சாதனையில் இடம் பிடிக்கும் வாய்ப்பை இழந்தார். தமிழக சட்டப்பேரவைக்கான 17 வது தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

தமிழ்நாட்டில் 13 முறை எம்எல்ஏவாக தேர்வானவர் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி. அவரது சாதனையை சமன் செய்யும் இடத்தில் திமுகவின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான துரைமுருகன் 2026 சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொண்டார்.

அமைச்சர் துரைமுருகன் இதுவரை 13 தேர்தல்களை சந்தித்துள்ளார். 1971ம் ஆண்டு முதன் முறையாக காட்பாடி தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட துரைமுருகன், ராணிப்பேட்டை தொகுதியில் 1977 மற்றும் 1980ம் ஆண்டுகளிலும், பிறகு காட்பாடி தொகுதியில் தொடர்ந்து போட்டியிட்டு வருகிறார்.

இதில், காட்பாடி தொகுதியில் 1984 மற்றும் 1991ம் ஆண்டுகளில் தோல்வியை தழுவி உள்ளார். அமைச்சர் துரை முருகன் பொதுப்பணி துறை, நீர்வள துறை, சட்ட துறை, கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் துறை, மின்சார துறை அமைச்சராகவும் இருந்துள்ளார். நீர்வள துறையில் நீண்ட அனுபவம் பெற்றவர்.

திமுகவில் அண்ணா, மு.கருணாநிதி, பேராசிரியர் க.அன்பழகன் ஆகியோரை தொடர்ந்து நான்காவதாக திமுகவின் பொதுச் செயலா ளராக அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.

சென்னை அனைத்து கல்லூரிகள் தமிழ் மன்ற தலைவர், 1965ல் இந்தி எதிர்ப்பு போரில் முதலில் கைதான மாணவர் தலைவராகவும், அண்ணாவுடன் சிறைவாசம், மிசாவில் ஓராண்டு சிறை, திமுகவில் தணிக்கை குழு உறுப்பினர், மாணவர் அணி செயலாளர், தலைமை கழக முதன்மை செயலாளர், திமுக துணை பொதுச்செயலாளர், திமுக பொருளாளர் உள்ளிட்ட பதவிகளை வகித்துள்ளார்.

இந்த தேர்தலில் துரை முருகன் 13வது முறையாக போட்டி யிடுவது சாதனையாக கருதப்பட்டது. வயதான காலத்தில் அவர் போட்டியில் இருந்தது ஒரு பக்கம் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆனால், இந்த முறை எப்படியும் வெல்ல வேண்டும் என்ற முனைப்புடன் அமைச்சர் துரைமுருகன் குடும்பத்தினரும், அவரது ஆதரவாளர்களும் வேலை செய்தனர்.

துரைமுருகன் வயதான காலத்தில் ஏன் சாதனைக்காக போட்டியிட வேண்டும் என தேர்தல் பிரச்சார கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு பதிலளித்த துரைமுருகன், 'எடப்பாடியை என்னுடன் ஓட்டப் பந்தயத்துக்கு வரச்சொல்லுங்கள்' என்றார்.

இப்படி காட்பாடி தேர்தல் களத்தில் திமுகவும், அதிமுகவும் முண்டியடித்து பிரச்சாரம் செய்து வந்த நிலையில் தவெக வேட்பாளர் டாக்டர் சுதாகர், தனக்கு தெரிந்த பிரச்சாரத்தில் தீவிரம் காட்டி வந்தார். வாக்கு எண்ணிக்கை தொடங்கியதில் இருந்து துரைமுருகன் தரப்பினர் எதிர்பார்த்த எந்த திருப்பு முனையும் களத்தில் ஏற்படுத்த முடியவில்லை என்பது தெரியவந்தது.

1991ம் ஆண்டு தேர்தலுக்கு பிறகு துரைமுருகன் இந்த தேர்தலில் காட்பாடியில் தொகுதியில் தோல்வியை தழுவியுள்ளார்.

காட்பாடி தொகுதியில் 2 முறை அதிமுகவிடம் வெற்றியை பறிகொடுத்தவர் இந்த முறை தவெகவிடம் பறிகொடுத்துள்ளார். இதன் மூலம், முன்னாள் முதல் வர் கருணாநிதியின் 13வது முறை எம்எல்ஏ ஆகும் சாதனை முறியடிக்கும் அவரது கனவு நிறைவேறவில்லை.

## "காரைக்குடியில் குரல் கொடுத்த மக்கள் தீர்ப்பு!" : டாக்டர் டி.கே. பிரபுவின் மாபெரும் வெற்றி - எதிரணிகள் தள்ளாடல்!







காரைக்குடி, மே.6

2026 சட்டமன்றத் தேர்தலில் காரைக்குடி (தொகுதி எண்: 184) தொகுதி அரசியல் வரலாற்றை தலைகீழாக மாற்றும் வகையில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் டாக்டர் டி.கே. பிரபு அபார வெற்றியைப் பதிவு செய்துள்ளார். ஆரம்பம் முதல் இறுதி சுற்று வரை முன்னிலை தக்கவைத்த அவர், எதிரணிகளுக்கு எட்டாத உயரத்தில் வெற்றிக்கொடி நாட்டியுள்ளார்.

வாக்கு எண்ணிக்கையின் இறுதி நிலவரப்படி, டாக்டர் டி.கே. பிரபு 1,01,358 வாக்குகள் பெற்று மாபெரும் முன்னிலையில் வெற்றி பெற்றார். அவருக்கு எதிராக போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் எஸ். மங்குடி 55,284 வாக்குகள் மட்டுமே பெற்று இரண்டாம் இடத்தில் தள்ளப்பட்டார். அ.ம.மு.க (தேசிய ஜனநாயக கூட்டணி) வேட்பாளர் 33,352 வாக்குகள், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீமான் 27,214 வாக்குகள் பெற்று பின்னடைவைச் சந்தித்தனர்.

இந்தத் தேர்தலில் டாக்டர் டி.கே. பிரபு பெற்றுள்ள 46,074 வாக்குகள் வித்தியாசம், காரைக்குடி தொகுதியில் சமீப காலங்களில் காணாத அளவுக்கு பெரியதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. ஆரம்ப சுற்றிலிருந்தே நிலை குலைந்த எதிரணிகள், இறுதியில் முழுமையாக சரிந்தன என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

வாக்குப்பதிவு - சதவீதம்:

இந்தத் தொகுதியில் மொத்தம் 3,05,925 வாக்காளர்கள் இருந்த நிலையில், 2,26,999 வாக்குகள் பதிவு செய்யப்பட்டு, சுமார் 74.20% வாக்குப்பதிவு நிகழ்ந்துள்ளது. இது வாக்காளர்களின் அதிக ஈடுபாட்டை வெளிப்படுத்துகிறது.

கொண்டாட்ட களமாக மாறிய காரைக்குடி:

வெற்றி அறிவிக்கப்பட்டவுடன், காரைக்குடி நகரம் முழுவதும் அரசியல் கொண்டாட்ட களமாக மாறியது. தமிழக வெற்றிக் கழகத் தொண்டர்கள் பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கி, ஆர்ப்பாட்ட கோஷங்களுடன் வெற்றியை கொண்டாடினர். முக்கிய சாலைகள் அனைத்தும் கொண்டாட்ட பேரணிகளால் நிரம்பின. "மக்களின் தீர்ப்பு ஞ மாற்றத்திற்கான ஓட்டு"

வெற்றிக்குப் பின்னர் பேசிய டாக்டர் டி.கே. பிரபு, "இது என் வெற்றி அல்ல, மக்களின் வெற்றி. காரைக்குடியில் மாற்றம் வேண்டுமென மக்கள் எடுத்த தீர்ப்புதான் இது. வளர்ச்சியும் நம்பிக்கையும் ஒன்றாக கொண்டு செல்வேன்," என்று தெரிவித்துள்ளார்.

அரசியல் அதிர்வுகள்:

இந்த முடிவு, மாநில அரசியலில் புதிய சமநிலையை உருவாக்கும் என அரசியல் நிபுணர்கள் கணிக்கின்றனர். குறிப்பாக, பாரம்பரிய கட்சிகளின் வாக்கு வங்கி சிதறியிருப்பது தெளிவாகப் பார்க்கப்படுகிறது. மொத்தத்தில், காரைக்குடி தேர்தல் முடிவு ஞ "ஒரு வெற்றி மட்டும் அல்ல, ஒரு அரசியல் செய்தி!" என்று அரசியல் வட்டாரங்கள் பரபரப்பாக பேசுகின்றன.

## மதுரையின் 4 தொகுதிகளில் தவெக சார்பில் வெற்றி பெற்ற 'திடீர்' வேட்பாளர்கள்!

மதுரை: மே.6-

மதுரை மாவட்டத்தில் மதுரை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, மத்தி, மேலூர், திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி, சோழவந்தான் (தனி) ஆகிய 10 தொகுதிகள் உள்ளன. இதில் தவெக சார்பில் 10 தொகுதிகளில் வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இதில் மதுரை தெற்கு தொகுதியில் தவெக வேட்பாளராக பீட்டர் ஜோ என்பவர் அறிவிக்கப்பட்டார். அத்தொகுதியில் சவுராஷ்டிரா சமூகத்தினர் அதிகமாக உள்ளதால், அச்சமூகத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்க வேண்டும் என அக்கட்சி தலைமையிடம் வலியுறுத்தப்பட்டது.

அதன்படி சவுராஷ்டிரா சமூகத்தைச் சேர்ந்த கோபிசன் அறிவிக்கப்பட்டார். அதே சமூகத்தைச் சேர்ந்தவர் நாதக சார்பில் போட்டியிட்ட நிலையிலும் தவெக வேட்பாளர் கோபிசன் வெற்றி பெற்றார்.

சோழவந்தான் (தனி) தொகுதியில் அதிமுக முன்னாள் எம்எல்ஏ கருப்பையா, அதிமுக சார்பில் வாய்ப்பு கேட்டார். ஆனால் அக்கட்சி சார்பில் முன்னாள் எம்எல்ஏ மாணிக்கம் அறிவிக்கப்பட்டார். இதனால் அதிமுகவில் வாய்ப்பு கிடைக்காத ஏமாற்றத்தில் கருப்பையா தவெகவில் சேர்ந்து திடீர் வேட்பாளரானார்.

அவர் தற்போது சோழவந்தான் தொகுதியில் வெற்றிபெற்றுள்ளார். தற்போதைய திமுக வேட்பாளர் வெங்கடேசனை தோற்கடித்துள்ளார். அதேபோல், திருப்பரங்குன்றம் திமுக முன்னாள் ஒன்றியச் செயலாளரும், அழகிரி ஆதரவாளருமான கார்த்திகேயன், தவெகவில் சேர்ந்த வுடன் மதுரை கிழக்கு தொகுதி தவெக வேட்பாளரானார்.

இதில் அமைச்சர் பி.மூர்த்தியை எதிர்த்து களம் கண்டார். இங்கு அதிமுக வேட்பாளராக மாங்குளம் மகேந்திரன் போட்டி யிட்டார். இதில் தவெக வேட்பாளர் கார்த்திகேயன் வெற்றி பெற்றுள்ளார்.

மதுரை மத்திய தொகுதி தவெக வேட்பாளர் மதார் பதூருதீன் என்ற முஸ்தபாவின் சொந்த ஊர் தேனி மாவட்டம் உத்தமபாளையம். ஆனால் சென்னையில் வசித்து வருகிறார். விஜய் ரசிகரான இவர், தவெக கட்சி ஆரம்பித்ததிலிருந்து சமூக வலைதளங்கள், டிவி விவாத நிகழ்ச்சிகளில் தவெகவுக்கு ஆதரவாக பேசி வந்தார்.

இதனால் மதுரை மத்திய தொகுதியில் தவெக திடீர் வேட்பாளரானார். இந்நிலையில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், அதிமுக வேட்பாளர் திரைப்பட இயக்குநர் சுந்தர்.சி ஆகியோரை எதிர்த்து போட்டியிட்டு தற்போது வெற்றி பெற்றுள்ளார்.




# குன்னூர் தொகுதியில் திமுக வேட்பாளர் கே எம் ராஜு அமோக வெற்றி

நீலகிரி மே,6-

தமிழக முழுவதும் கடந்தமாதம் 23ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது.இதில் குன்னூர் தொகுதியில் திமுக மாவட்ட பொறுப்பாளர் கே எம் ராஜு வேட்பாளராக போட்டியிட்டார்.அதிமுக சார்பில் சாந்தி ராமு,தவெக சார்பில் தங்கராஜ்,நாம் தமிழர் கட்சியின் சார்பில் தீனு ஆகியோர் களத்தில் இருந்தனர்.இந்நிலையில் நேற்று ஊட்டி அரசு பாலிடெக்னிக் மையத்தில் நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையில் துவக்கத்தில் அதிமுக வேட்பாளர் சாந்தி ராமு முன்னிலையில் இருந்து வந்த நிலையில்,அதன் பின்னர் ஒவ்வொரு சுற்றுக்கும் திமுக வேட்பாளர் கே எம் ராஜு முன்னிலை பெற்று வந்தார். இதில் இறுதிச்சுற்றில் 8,0,99 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் கே எம் ராஜு வெற்றி பெற்றார். இதனை தொடர்ந்து அவருக்கு குன்னூர் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்றதற்கு உண்டான சான்றிதழை குன்னூர் சார் ஆட்சியரும் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரியுமான சங்கீதா வழங்கினார். அவருடன்,மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடலூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் திராவிட மணி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# பெரம்பலூர் தொகுதியில் தவேக சார்பில் சிவக்குமாரும், குன்னம் தொகுதியில் திமுக சார்பில் சிவசங்கர் வெற்றி பெற்றனர்





பெரம்பலூர்.மே,6-

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் தொகுதியில் அதிமுக சார்பில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இளம்பை. இரா, தமிழ்செல்வம், திமுக சார்பில் டாக்டர் ஜெயலட்சுமி, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சிவக்குமாரும், நாம் தமிழர் கட்சி சார்பில் சுகன்யா என முக்கிய வேட்பாளர்களாக களம் கண்டனர்.இதேபோல் குன்னம் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் அமைச்சர் சிவசங்கர், அதிமுக கூட்டணியில் சரண்யாவும், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் ரேவதியும், நாம் தமிழர் கட்சி சார்பில் கீர்த்தி வாசனும் முக்கிய வேட்பாளராக களத்தில் இருந்தன ர்.பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் தவெக வேட்பாளர் சிவகுமாருக்கும் அதிமுக வேட்பாளர் இளம்பை தமிழ்ச்செல்வனுக்கும் கடுமையான போட்டி நிலவியது. அதன் பின்னர் தவெக வேட்பாளர் சிவகுமாருக்கும் திமுக வேட்பாளர் டாக்டர் ஜெயலட்சிமிக்கும் கடுமையான போட்டி நிலவியது இறுதியாக சிவக்குமார் 89776 ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றார்.

குன்னம் தொகுதியில் ஆரம்பத்தில் இருந்தே அமைச்சர் சிவசங்கரன் முன்னிலை பெற்று வந்தார் இரண்டாவது இடத்தில் அதிமுக சரண்யாவும், மூன்றாவது இடத்தில் ரேவதியும் பெற்றிருந்தனர். கடைசி கட்ட நிலவரப்படி திமுக சார்பில் சிவசங்கர் 84003வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.



# சோலையம்மன் முனீஸ்வரர் கோயில் 43ம் ஆண்டு தீமிதி திருவிழா

மாதவரம், மே.6-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சி சோலையம்மன் நகரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற சோலையம்மன் முனீஸ்வரர் கோவில், 43ம் ஆண்டு தீமிதி திருவிழா கோயில் நிர்வாகிகள், கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் விமரிசையாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி ஹோமத்துடன் கொடியேற்றம், மீனாட்சி ஸ்ரீ சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண வைபவம், அம்மனுக்கு புனித கலசநீர் அபிஷேகம், நெய்வேத்தியம், காப்புக் கட்டுதல், கரகம் எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல், பால்காவடி,கங்கைநீராடுதல், கிராம பொதுமக்கள் பொங்கல் வைத்தல் போன்ற பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பின்னர் மூலவர் சோலையம்மனுக்கு வாசனை திரவியங்கள் மற்றும் பால் அபிஷேகம் செய்து வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து விரதம் இருந்து காப்புக்கட்டிய 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் தீ குண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்திக்கடனை பூர்த்தி செய்தனர். மேலும், இத்திருவிழாவிற்கு கோவில் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும், தீமிதி திருவிழாவை முன்னிட்டு கோயில் மற்றும் பல்வேறு நற்பணி மன்றங்கள் சார்பில் அன்னதானம் மற்றும் குளிர்பானங்கள் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. முடிவில் உற்சவர் அம்மன் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாளம் முழங்க, வாணவேடிக்கையுடன் திருவீதி உலா நடைபெற்றது.மேலும் திருவிளக்கு பூஜை, மஞ்சள்நீராட்டு விழா நடைபெற்றது.




■ வேப்பனப்பள்ளி தொகுதியில் திமுக வேட்பாளர் பி. ஸ். சீனிவாசன் வெற்றி ரு சான்றிதழ் பெற்றார்:கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதியில் திமுக வேட்பாளர் பி. எஸ். சீனிவாசன் வெற்றி பெற்றார். இதனைத் தொடர்ந்து, தேர்தல் அலுவலரிடம் இருந்து வெற்றி பெற்றதற்கான அதிகாரப்பூர்வ சான்றிதழை பெற்றுக் கொண்டார்.இந்த நிகழ்வில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பார் இளங்கோவன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



# தேனி மாவட்டம் கம்பம் சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் போட்டியிட்ஜெகநாத் மிஸ்ரா முதல் முறையாக வெற்றி பெற்று உள்ளார்

தேனி மே,6-

தேனி மாவட்டம் கம்பம் சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் போட்டியிட்ஜெகநாத் மிஸ்ரா முதல் முறையாக வெற்றி பெற்று உள்ளார். சட்டமன்ற உறுப்பினருக்கான வெற்றி சான்றிதழை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவளரும் மாவட்ட ஆட்சியரும் மான ரஞ் சித் சிங்க அவர்களிடம் இருந்து சான்றிதழை பெற்றுக் கொண்ட பிறகு செய்தியாளர்களிடம் கம்பம் தொகுதியை முன்மாதிரியான தொகுதியாக மாற்றுவதாகவும் தொழில் சாலைகள் அமைத்து இளைஞர்களுக்குவேலை வாய்ப்பு உருவாக்கிட பாடுபடுவேன் எனவும் நீண்ட நாள் கோரிக்கையான அரசு கலைக் கல்லூரி கொண்டு வரப்படும் ஆயத்த ஆடை பூங்கா கொண்டு வரப்படும் என்பன பல்வேறு கோரிக்கைகள் கம்பம் தொகுதியில் செயல்படுத்தபடும் என செய்தியாளர்களிடம் பேட்டியில் தெரிவித்தார் வெற்றி உடன் த வெ க தொண்டர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடி மகிழ்ந்தனர் உடன் த வெ க நிர்வாகிகள் பலர் இருந்தனர்.



■ ஓசூர் தொகுதியில் அதிமுக வேட்பாளர் பாலகிருஷ்ணா ரெட்டி வெற்றி ரு சான்றிதழ் பெற்றார்:கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் சட்டமன்றத் தொகுதியில் அதிமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ணா ரெட்டி வெற்றி பெற்றார். இதனைத் தொடர்ந்து, தேர்தல் அலுவலரிடம் இருந்து வெற்றி பெற்றதற்கான அதிகாரப்பூர்வ சான்றிதழை பெற்றுக் கொண்டார்.இந்த நிகழ்வில் அதிமுக நிர்வாகி ஜெயபிரகாஷ் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



# பர்கூர் தொகுதி EVM இயந்திரங்கள் பாதுகாப்பு அறையில் சீல்

கிருஷ்ணகிரி, மே 06-

52பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குப்பதிவு மின்னணு (EVM) இயந்திரங்கள் இன்று அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் இருந்து பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டு, பர்கூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு அறையில் (ஸ்ட்ராங் ரூம்) வைக்கப்பட்டன. இயந்திரங்கள் அனைத்தும் தேர்தல் விதிமுறைகளின்படி முகவர்கள் முன்னிலையில் காலை 11.30 மணியளவில் பாதுகாப்பாக பூட்டி சீல் வைக்கப்பட்டன. இந்த நடவடிக்கை முழுமையான கண்காணிப்புடன், முறையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து 52பர்கூர் சட்டமன்ற தொகுதியின் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும், வட்டாட்சியருமானவர் தகவல் வழங்கியுள்ளார். தேர்தல் செயல்முறைகளில் வெளிப்படைத்தன்மையும் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்ட முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் வெற்றி பெற்றார். சட்டமன்ற உறுப்பிரைக்கான வெற்றி சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் இருந்து பெற்றுக் கொண்டார். உடன் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ் செல்வன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஓ பி ரவிந்தரநாத் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இலட்சுமணன் உட்பட பலர் இருந்தனர்.

# மக்களுக்கு நன்றி கூறிய உதயநிதி ஸ்டாலின்

சென்னை:மே 6-

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலரிடம் இருந்து நேற்று மாலை பெற்றுக் கொண்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய உதயநிதி, “சேப்பாக்கம் தொகுதி மக்கள் எனக்கு மீண்டும் வாக்களித்ததற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் தீர்ப்பை தலைவணங்கி ஏற்றுக்கொள்கிறேன். புதிதாக பதவி ஏற்கப்போகும் அரசுக்கு வாழ்த்துகள். வெற்றி பெற்ற வேட்பாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்” என்றார்




■ நீலகிரி மாவட்டம் உதகை சட்டமன்ற தொகுதியில் பாஜக வேட்பாளர் எம்.போஜராஜன் வெற்றி பெற்றார்.

# கிருஷ்ணகிரி அரசு இசைப் பள்ளியில் மாணவர் சேர்க்கை தொடக்கம்

கிருஷ்ணகிரி, மே 06-

கிருஷ்ணகிரி மாவட்ட அரசு இசைப் பள்ளியில் 2026ஞீ27 ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை வருகிற 06.05.2026 முதல் தொடங்குகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் கலை மற்றும் பண்பாட்டு துறையின் கீழ் கிருஷ்ணகிரியில் அரசு இசைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு



10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கு இணையான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. மேலும், 3 ஆண்டுகள் பயிற்சி முடித்த மாணவர்கள் இசைக் கல்லூரிகளில் நேரடியாக பட்டயப்படிப்பின் 3ஆம் ஆண்டில் சேரும் வாய்ப்பும் உண்டு. இப்பள்ளியில் குரலிசை, நாதசுரம், தவில், தேவாரம், பரதநாட்டியம், வயலின், மிருதங்கம் போன்ற பாரம்பரிய கலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 13 முதல் 25 வயது வரையிலான ஆண், பெண் இருபாலரும் சேரலாம். பயிற்சி காலம் 3 ஆண்டுகள் ஆகும். பள்ளி தினமும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இயங்கும் முழுநேரப் பள்ளியாகும்.

மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 கல்வி உதவித்தொகை வழங்கப்படும். பயிற்சி கட்டணம் எதுவும் இல்லை; ஆண்டிற்கு ரூ.350 மட்டும் சிறப்பு கட்டணமாக செலுத்த வேண்டும். மேலும், மாணவர்களுக்கு நகரப் பேருந்துகளில் இலவச பயண சலுகையும் வழங்கப்படுகிறது.

இசையில் ஆர்வம் கொண்ட மாணவ, மாணவியர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. சேர விரும்புவோர் தலைமை ஆசிரியர், மாவட்ட அரசு இசைப் பள்ளி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், திருமலை நகர், இராமாபுரம், கிருஷ்ணகிரி ஞீ 635115 என்ற முகவரியிலும், 04343234001 மற்றும் 9500388896 என்ற தொலைபேசி எண்களிலும் தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கூடலூர் தொகுதி தேர்தல் முடிவு - திமுக அபார வெற்றி

நீலகிரி கூடலூர்,, மே 6-

நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற 2026 தேர்தலில் திமுக வேட்பாளர் மு. திராவிடமணி அபார வெற்றி பெற்றார். வாக்கு எண்ணிக்கை தொடங்கிய முதல்கட்டத்திலிருந்தே முன்னிலை வகித்த அவர், இறுதியில் உறுதியான வெற்றியை பதிவு செய்தார்.

இத்தேர்தலில் மு. திராவிடமணி சுமார் 42 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் பொன். ஜெயசீலன் சுமார் 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் பெற்றும் தோல்வி அடைந்தார். இருவருக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் 14 ஆயிரத்திற்கும் அதிகமாக பதிவாகியுள்ளது.மேலும், தவெக, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட பிற கட்சிகளும், சுயேட்சை வேட்பாளர்களும் போட்டியிட்டிருந்தாலும், முக்கிய போட்டி திமுக மற்றும் அதிமுக இடையே மட்டுமே நடைபெற்றது.இந்த வெற்றியின் மூலம் கூடலூர் தொகுதியில் திமுக தனது ஆதிக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளதுடன், நீலகிரி மாவட்ட அரசியல் நிலவரத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பெருங்களத்தூர் சதானந்தபுரத்தில் 29ம் ஆண்டு கோடை உற்சவம் மழைவேண்டியும், உலக நன்மைக்காகவும்ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் திருமஞ்சனம் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது

பெருங்களத்தூர் மே .06-

செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூர் அடுத்த சதானந்தபுரத்தில் ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாள் கோடை உற்சவ எழுந்தருளுதல் நிகழ்ச்சி நடைப்பெற்றது. உலக நன்மைக்காகவும், மக்களின் வேண்டுதல்கள் நிறைவேறவேண்டியும் பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகமும், பூஜையும் நடைபெற்றது. பின்னர் பெருமாளுக்கு விஷேஷ திருமஞ்சனம் நடந்தது.





பெருமாளுக்கு விசேஷ திருமஞ் சனம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. விழாவில் சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீனிவாச பெருமாள் அருள்பாலித்தார். குழந்தைகள் பக்தி பாடல்கள் பாடினார்கள். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு பெருமாளின் அருளை பெற்றனர். அனைத்து பக்தர்களுக்கும் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது. சமஸ்கிருத பாரதி குழுவினரால் பகவத் கீதா பாராயணம் நடைபெற்றது. ஸ்ரீ ஞானா நந்த பஜன் சேவா மண்டலியினரால் நாம சங்கீர்த்தனம் பாடப்பட்டது. மாலை ஸ்ரீமதி. ஹரிப்ரியா பாலாஜி அவர்களின் ஹரிகதா காலட்சேபம் நடைபெற்றது. பக்தர்களின் கோவிந்தா என்ற பக்தி கோஷத்துடன் ஸ்ரீனிவாச பெருமாள் ஆஸ்தானம் எழுந்தருளினார். கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து ஆன்மிக பக்த கோடிகளுக்கும் ஸ்ரீனிவாச பெருமாளின் பூரண அருளாசி கிடைக்க பிராத்திக்கின்றோம் அவர்கள் தெரிவித்தனர்

# ஃபீனிக்ஸ் பறவை போல் அதிமுக மீண்டும் வெற்றி பாதைக்கு திரும்பும்

## பழனிசாமி நம்பிக்கை

சென்னை:மே 6-

ஃபீனிக்ஸ் பறவை போல், அதிமுக மீண்டும் வெற்றி பாதைக்கு திரும்பும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: ஜனநாயகத்தில் மக்கள்தான் நீதிபதிகள். மக்களுக்காக தான் ஆட்சி. மக்கள் வழங்கிய முடிவை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன்.



தமிழக சட்டப்பேரவை தேர்தலில் எழுச்சியுடன் முன்வந்து, ஜனநாயக கடமையாற்றிய அனைத்து மக்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற்ற பிரச்சாரம் செய்த பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர்கள் அமித்ஷா, பியூஷ் கோயல், ஜே.பி.நட்டா, பாஜக தேசிய தலைவர் நிதின் நபின் ஆகியோருக்கும், கூட்டணி வெற்றிக்கு உழைத்த நயினார் நாகேந்திரன் (பாஜக), அன்புமணி (பாமக), டிடிவி தினகரன் (அமமுக), ஜி.கே.வாசன் (தமாகா) உள்ளிட்ட கூட்டணி கட்சிக் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், கட்சி நிர்வாகிகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பின்னடைவில் இருந்து விரைவில் மீண்டும் வருவோம். மறைந்த முதல்வர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதா ஆசியுடன், ஃபீனிக்ஸ் பறவை போல், அதிமுக மீண்டும் வெற்றிப் பாதைக்கு திரும்பும்.

“எனக்கு பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் அதிமுக மக்களுக்காகவே இயங்கும்” என்ற ஜெயலலிதாவின் வார்த்தைகளை மெய்ப்பிக்கும் வகையில் அதிமுக மக்கள் பணியில் என்றென்றும் ஈடுபடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.





# தவெக தலைவர் விஜய்க்கு பவன், லோகேஷ் வாழ்த்து

விஜயவாடா:மே 06-

தமிழக சட்டப்பேரவை தேர்தல் விஜய் தலைமையிலான தவெக வெற்றி பெற்றுள்ளது.

இது குறித்து ஆந்திர துணை முதல்வரும் ஜனசேனா கட்சித் தலைவருமான பவன் கல்யாண் வெளியிட்டுள்ள செய்தியில், ”தமிழ்நாட்டில் விஜய் பெரும்பான்மையான மக்களின் மனதை வென்று, வெற்றிக் கனியை பறித்துள்ளார். கட்சியை தொடங்கிய சிறிது காலத்திலேயே மாபெரும் வெற்றியை ருசித்த விஜய்யை நான் மனதார வாழ்த்துகிறேன்” என்று கூறியுள்ளார்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் மகனும், கல்வி அமைச்சருமான லோகேஷ் தனது சமூக வலைதளப் பதிவில், ”விஜய் அரசியல் அரங்கேற்றமே அதிரடியாக உள்ளது. தமிழகத்தில் இளைய சமுதாய வாக்காளர்களின் ஒட்டுமொத்த வெற்றி இது. பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, பொறுப்புகள், கடமைகளுடன் வெற்றி நடை போட தவெக தலைவர் விஜய்க்கு எனது வாழ்த்துகள்” என்று கூறியுள்ளார்.

ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி, ”பொது வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை வெற்றிகரமாக தொடங்கியுள்ள சகோதரர் விஜய்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்” என்றார்.

# கிருஷ்ணகிரியில் பள்ளி செல்லும் சிறார்களுக்கு ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில், கோடைக்கால கலைப் பயிற்சி முகாம்

கிருஷ்ணகிரி.மே 6-

சிறார்களின் கலை ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் இளம் வயதிலேயே கலை ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவிக்கவும் தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத்துறையின் கீழ் இயங்கும் ஜவகர் சிறுவர் மன்றங்கள் வாயிலாக சிறுவர் சிறுமியர்க்கு பகுதி நேர கலைப்பயிற்சியினை அளித்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஜவகர் சிறுவர் மன்றம் மாவட்ட அரசு இசைப்பள்ளி வளாகத்தில் இயங்கி வருகிறது.கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளி செல்லும் சிறார்கள் இக்கோடைக்கால விடுமுறையில் பயனுள்ள வகையில் கலைகள் பயின்றி ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில் கோடைக்கால கலைப்பயிற்சி முகாம் மே 06 முதல் மே 15 வரை காலை 10 மணி முதல் 12 மணி வரை நடத்தப்பட உள்ளது. குரலிசை, பரதநாட்டியம், ஓவியம், யோகா ஆகிய கலைகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. 5 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட சிறார்கள் இம்முகாமில் சேர்ந்து பயன்பெறலாம். இப்பயிற்சிக்கு கட்டணம் இல்லை. சிறுவர் மன்ற சந்தாவாக ரூ.200/ மட்டும் செலுத்தப்பட வேண்டும். பயிற்சி நிறைவு நாளன்று மாணவர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.இப்பயிற்சி தொடர்பாக தகவல் வேண்டுவோர் மண்டலக் கலை பண்பாட்டு மைய வளாகம், அய்யம்பெருமாம்பட்டி அஞ்சல், தளவாய்பட்டி திருப்பதி கவுண்டனூர் செல்லும் சாலை, சேலம் 636302 என்ற முகவரியில் கிருஷ்ணகிரி மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றத்தின் திட்ட அலுவலரை 9943351775 அல்லது 0427 2386197 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். தமிழகத்தின் பாரம்பரியம் மிக்க கலைகளை பயிலுவதற்கு உரிய வாய்ப்பினை கிருஷ்ணகிரி மாவட்ட சிறார்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என சேலம் மண்டல உதவி இயக்குநர் திரு.சு.சங்கரராமன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# புதுச்சேரி - என்ஆர்.காங்கிரஸ் சட்டப்பேரவை கட்சித் தலைவராக ரங்கசாமி மீண்டும் தேர்வு

புதுச்சேரி: மே 06-

நள்ளிரவில் நடந்த எம்எல்ஏக்கள் கூட்டத்தில் என்.ஆர்.காங்கிரஸ் சட்டப்பேரவைத் தலைவராக ரங்கசாமியை மீண்டும் தேர்வு செய்தனர். அமைச்சர்கள் யார், யார் என விரைவில் முடிவு எடுக்கவுள்ளதாக கூறப்படுகிறது.புதுவை சட்டப்பேரவைத் தேர்தலில் என்டிஏ கூட்டணி 18 இடங்களை கைப்பற்றி மீண்டும் ஆட்சியமைக்கிறது. இத்தேர்தலில் என்.ஆர். காங்கிரஸ் 12 தொகுகளில் வென்றுள்ளது. அதையடுத்து போட்டியில் வெற்றி பெற்ற வேட்பாளர் அனைவரும் முதல்வரும் என்.ஆர்.காங்கிரஸ் கட்சி நிறுவனருமான ரங்கசாமியை நேரில் சந்தித்து ஆசி பெற்றனர்.தொடர்ந்து, முதல்வர் ரங்கசாமி தலைமையில் நேற்று நள்ளிரவில் காமராஜர் சாலையில் உள்ள ஹோட்டலில் என்.ஆர். காங்கிரஸ் எம்எல்ஏக்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்கேற்ற எம்எல்ஏக்கள் முதல்வர் ரங்கசாமியை என் ஆர் காங்கிரஸ் சட்டப்பேரவை கட்சித் தலைவராக ஒருமனதாக தேர்வு செய்துள்ளனர். இதற்கான கடிதத்தில் எம்எல்ஏக்கள் கையெழுத்திட்டனர். என்டிஏ கூட்டணியில் முதல்வர் வேட்பாளர் ரங்கசாமிதான் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.மேலும், புதுச்சேரியில் யார் யாருக்கு அமைச்சர் பதவிகள், கூட்டணிக் கட்சிகளுக்கு எத்தனை அமைச்சர் பதவிகள் என்பதை முதல்வர் ரங்கசாமி முடிவு எடுக்கவுள்ளதாக தெரிகிறது. இதனிடையே, விரைவில் துணை நிலை ஆளுநர் கைலாஷ் நாதனை சந்திக்கவுள்ளதாக ரங்கசாமி தெரிவித்துள்ளார்.



# பவானிபூரில் மம்தா பானர்ஜி அதிர்ச்சி தோல்வி

பவானிபூர் மே 06-

பவானிபூர் தொகுதி வாக்கு எண்ணிக்கையின்போது முதல்வர் மம்தா, பாஜக மூத்த தலைவர் சுவேந்து அதிகாரி இடையே கடும் போட்டி நிலவியது.

பிற்பகல் நிலவரப்படி சுமார் 7,000 வாக்குகள் வித்தியாசத்தில் மம்தா முன்னிலையில் இருந்தார். இந்த வித்தியாசம் படிப்படியாக குறைந்து கொண்டே வந்தது. இரவு 7.30 மணி நேர நிலவரப்படி இருவருக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் 2,000 ஆக குறைந்தது.

முதல்வர் மம்தாவும், சுவேந்து அதிகாரியும் வாக்கு எண்ணும் மையத்தில் அமர்ந்திருந்தனர். 16வது சுற்று வாக்கு எண்ணிக்கையின்போது பாஜகவுக்கு ஆதரவாக முறைகேடு நடப்பதால் திரிணமூல் முகவர்கள் குற்றம் சாட்டினர். அப்போது வாக்குச்சாவடி மைய அதிகாரி சுர்ஜனானி பஞ்சாபி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அவரது சட்டை கிழிந்தது. இதன் காரணமாக வாக்கு எண்ணிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

சிறிது நேரத்துக்குப் பிறகு மீண்டும் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. இறுதியில் சுவேந்து அதிகாரி 15,105 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அப்போது முதல்வர் மம்தா, வாக்கு எண்ணும் மையத்தில் இருந்து வெளியேறினார். வாக்கு திருட்டு நடைபெறுவதாக கோஷம் எழுப்பியபடி அவர் வெளியேறிச் சென்றார்.

# ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் லஷ்மி மிட்டல், ஆதர் பூனாவாலா முதலீடு

## ரூ.15,660 கோடி ஒப்பந்தம்

இங்கிலாந்மே 6-

இங்கிலாந்தைத் தலைமையிடமாகக் கொண்ட இந்திய வம்சாவளி தொழிலதிபர் லஷ்மி மிட்டல் மற்றும் ஆதர் பூனாவாலா இணைந்து ஐபிஎல் அணியான ராஜஸ்தான் ராயல்ஸ் பங்குகளை வாங்கியுள்ளனர். இந்த ஒப்பந்தத்தின் மதிப்பு சுமார் 1.65 பில்லியன் டாலர்கள் (இந்திய மதிப்பில் ரூ.15,660 கோடி) என மதிப்பிடப்பட்டுள்ளது.





இந்த புதிய கூட்டணியில், தற்போதைய பிரதான உரிமையாளரான மனோஜ் பதாலேயுடன் சேர்ந்து மிட்டல் குடும்பமும், பூனாவாலாவும் இணைந்து செயல்பட உள்ளனர். மேலும், இந்த கூட்டணி பார்ல் ராயல்ஸ் மற்றும் பார்பேடோஸ் ராயல்ஸ் ஆகிய அணிகளிலும் உரிமையைப் பெறுகிறது.

2008 முதல் ஐபிஎல் தொடரில் இடம்பெற்று வரும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை மனோஜ் பதாலே வெறும் 67 மில்லியன் டாலர்களுக்கு வாங்கியிருந்தார். தற்போது இந்த அணியின் மதிப்பு பல மடங்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த ஒப்பந்தம் கடந்த சில மாதங்களாக நிலவி வந்த உரிமை தொடர்பான குழப்பங்களுக்கு முடிவு கட்டுகிறது. முன்னதாக, அமெரிக்காவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை வாங்குகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகின. ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை.

ஒப்பந்தத்தின் படி, மிட்டல் குடும்பம் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் சுமார் 75% பங்குகளைப் பெறும். ஆதர் பூனாவாலா சுமார் 18% பங்குகளை வைத்திருப்பார். மீதமுள்ள 7% பங்குகள் மனோஜ் பதாலே உள்ளிட்ட தற்போதைய முதலீட்டாளர்களிடம் தொடரும். பதாலே அணியின் நிர்வாகத்தில் தொடர்ந்தும் பங்கு பெறுவார்.

லஷ்மி மிட்டலின் மகன் ஆதித்யா மிட்டல் எதிர்காலத்தில் அணியின் முக்கிய முகமாக அமைய வாய்ப்பு உள்ளது. அவர் 2025ம் ஆண்டு பாஸ்டன் செல்டிக் அணியில் 1 பில்லியன் டாலர் முதலீடு செய்து விளையாட்டு துறையில் தன் தடத்தை பதித்திருந்தார். மேலும், மிட்டல் குடும்பம் 2007ம் ஆண்டு குவீன்ஸ்பார்க் ரேஞ்சர்ஸ் கிளப்பிலும் பங்குகளை பெற்றிருந்தது.

“எனக்கு கிரிக்கெட் மிகவும் பிடிக்கும். என் குடும்பத்தின் வேர்கள் ராஜஸ்தானில் இருப்பதால், இந்த அணியில் பங்கேற்பது எனக்கு பெருமையாகும். பள்ளி காலத்தில் நான் கிரிக்கெட் விளையாடி இருக்கிறேன். ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் பல சிறந்த வீரர்கள் விளையாடியுள்ளனர். எதிர்கால வெற்றிக்காக ரசிகர்களுடன் இணைந்து களத்தில் உற்சாகப்படுத்த ஆவலாக உள்ளேன்,” என்று லஷ்மி மிட்டல் தெரிவித்துள்ளார்

# குறைந்த தொகுதிகள்... கூடுதல் வெற்றி: விசிக, தேமுதிகவை முந்திய கம்யூனிஸ்ட்கள்

சென்னை:மே .06-

குறைந்த தொகுதிகளை பெற்றிருந்தாலும், விசிக, தேமுதிகவை காட்டிலும் கூடுதலான தொகுதிகளில் வெற்றி பெற்று கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்களது செல்வாக்கை நிரூபித்துள்ளன.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட குறைந்த தொகுதிகளிலும் அதிக வெற்றியைப் பதிவு செய்து இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் அரசியல் அரங்கில் கவனம் ஈர்த்துள்ளன.

திமுக கூட்டணியில் தொகுதிப் பங்கீட்டின்போது, இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் இரட்டை இலக்க தொகுதிகளைப் பெற தீவிர முயற்சி மேற்கொண்டன. எனினும், இழுபறிக்குப் பின்னர் இரு கட்சிகளுக்கும் தலா 5 தொகுதிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டன. இதற்கு அப்போதே அவர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.இந்நிலையில், தேர்தல் முடிவுகள் கம்யூனிஸ்ட்களின் செல்வாக்கை உறுதிப்படுத்தியுள்ளன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்ட 5 இடங்களில், தளி தொகுதியில் ராமச்சந்திரனும், திருத்துறைப்பூண்டியில் மாரிமுத்துவும் வெற்றி பெற்றனர்.



அதேபோல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் பத்மநாபபுரம் தொகுதியில் ஆர்.செல்லசாமியும், கீழ்வேளூரில் லதாவும் வெற்றி வாகை சூடியுள்ளனர். இதன்மூலம் இரு கட்சிகளும் தலா 2 இடங்களில் வெற்றியை பதிவு செய்துள்ளன.அதே நேரம் திமுக கூட்டணியில் 8 தொகுதிகளை பெற்ற விசிக, காட்டுமன்னார் கோயில் (ஜோதி மணி) மற்றும் திண்டிவனம் (வன்னியரசு) ஆகிய 2 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.10 தொகுதிகளில் போட்டியிட்ட தேமுதிகவோ, பிரேமலதா விஜயகாந்த் (விருத்தாசலம்) பெற்ற வெற்றியின் மூலம் ஒரே ஒரு இடத்துடன் திருப்தி அடைய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.அந்த வகையில், குறைந்த தொகுதிகளில் போட்டியிட்டாலும், கம்யூனிஸ்ட் கட்சிகள் கூடுதல் தொகுதிகளில் வெற்றியை பதிவு செய்து, தங்களது செல்வாக்கை நிரூபித்துள்ளன.

# மதுரையில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்!

## இளைஞர்களுக்கு தங்க வாய்ப்பு – நேரடி தேர்வு, மாதம் ₹15,000 வரை உதவித்தொகை

மதுரை, மே 6-

மதுரை மாவட்டத்தில் உள்ள 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு, ஐடிஐ, பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் படித்து முடித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில், மத்திய அரசின் பிரதம மந்திரி தேசிய தொழிற்பயிற்சி முகாம் (Apprenticeship Mela) வருகிற மே 11ஆம் தேதி (திங்கட்கிழமை) காலை 9 மணி முதல் மதுரை தோ.புதூரில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற உள்ளது.இந்த மாபெரும் முகாமில் அரசு மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த பல முன்னணி தொழில் நிறுவனங்கள் பங்கேற்று, தங்களது நிறுவனங்களுக்கு தேவையான பயிற்சியாளர்களை நேரடியாகத் தேர்வு செய்ய உள்ளன. இதனால், இளைஞர்களுக்கு இடத்திலேயே வேலைவாய்ப்பு பெறும் அரிய வாய்ப்பு உருவாகியுள்ளது.முகாமில் தேர்வு செய்யப்படும் பயிற்சியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.10,560 முதல் ரூ.15,000 வரை உதவித்தொகை வழங்கப்படும். மேலும், பயிற்சி நிறைவில் தேசிய அளவிலான தொழிற்பயிற்சி சான்றிதழும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.இந்த முகாமில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் தங்களது கல்விச் சான்றிதழ்கள், 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல், சாதி சான்றிதழ், ஆதார் அட்டை மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் உள்ளிட்ட ஆவணங்களுடன் வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தகவல்களுக்கு 9499055748, 9843372096, 7708717850 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# யார் இந்த வி.எஸ்.பாபு? கொளத்தூரில் ஸ்டாலினை வீழ்த்தியது எப்படி?

சென்னை மே 06-

தமிழக சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் யாரும் எதிர்பார்க்காத ஒரு திருப்பமாக, திமுகவின் கோட்டை எனக் கருதப்படும் கொளத்தூர் தொகுதியில் தவெக (தமிழக வெற்றிக் கழகம்) சார்பில் போட்டியிட்ட வி.எஸ்.பாபு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைத் தோற்கடித்துள்ளார்.தேர்தல் முடிவும் முக்கியத்துவமும்:கொளத்தூர் தொகுதியில் பதிவான வாக்குகளின் அடிப்படையில், சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வி.எஸ்.பாபு வெற்றி பெற்றுள்ளார். ஒரு காலத்தில் ஸ்டாலினின் நம்பிக்கைக்குரிய தளபதியாக இருந்தவரே





இன்று அவரைத் தோற்கடித்திருப்பது அரசியல் வட்டாரத்தில் பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

திமுக முதல் தவெக வரை: வி.எஸ்.பாபுவின் அரசியல் பயணம் திமுகவில் தொடக்கம்: வி.எஸ்.பாபு ஒரு காலத்தில் திமுகவின் வட சென்னை மாவட்டச் செயலாளராகவும், அக்கட்சியின் வலிமையான தளபதியாகவும் விளங்கியவர். வட சென்னையைத் தனது முழு கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர். 2006 - 2011 தேர்தல் பங்களிப்பு: கடந்த 2006ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் புரசைவாக்கம் தொகுதியின் எம்.எல்.ஏ வாகப் பணியாற்றினார். 2011ல் கொளத்தூர் தொகுதி உருவாக்கப்பட்ட போது, அங்கு ஸ்டாலின் வெற்றி பெறுவதற்கு முக்கியப் பங்காற்றியவர் இவரே. கருத்து வேறுபாடு: 2011 தேர்தலில் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் (சுமார் 2,000 வாக்குகள்) ஸ்டாலின் வெற்றி பெற்றதால், வி.எஸ்.பாபு மீது ஸ்டாலின் அதிருப்தியில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இதையடுத்து பி.கே. சேகர்பாபுவின் வருகைக்குப் பின் பாபு ஓரங்கட்டப்பட்டார். அதிமுகவிலிருந்து விலகல்: சில காலம் அதிமுகவில் இணைந்திருந்த பாபுவுக்கு அங்கேயும் சரியான அங்கீகாரம் கிடைக்கவில்லை எனத் தெரிகிறது.விஜய்யுடன் சந்திப்பு:தேர்தலுக்குச் சில நாட்களுக்கு முன்னதாக, நீலாங்கரையில் உள்ள நடிகர் விஜய்யின் இல்லத்தில் அவரைச் சந்தித்த வி.எஸ்.பாபு, தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார். அந்தச் சந்திப்பின் போது விஜய் கைகளைக் குறுக்காக வைத்து (Phoenix குறியீடு) காட்டியது, இன்று ஸ்டாலினின் தோல்வியைக் குறிக்கும் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது.

முடிவு:தொடர்ந்து ஆறு சுற்றுக்களிலும் முன்னிலை வகித்து வந்த வி.எஸ். பாபு, இறுதியில் ஒரு மிகப்பெரிய வெற்றியைப் பதிவு செய்துள்ளார். "முன்னாள் முதல்வரைத் தோற்கடித்தது எப்படி?" என்ற கேள்விகளுக்கு விடையாக, தொகுதி மக்களுடனான பழைய நெருக்கமும், தவெகவின் புதிய எழுச்சியின் காரணமாகப் பார்க்கப்படுகிறது.

# ‘விஜய் வெற்றியை கணித்தபோது ஏளனம் செய்தனர்’ ஆக்ஸிஸ் மை இந்தியா பிரதீப் குப்தா ஆதங்கம்

புதுடெல்லி:மே 06-

தமிழக அரசியல் களத்தில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில், பிரபல தேர்தல் கணிப்பு நிறுவனமான ‘ஆக்ஸிஸ் மை இந்தியா’ அமைப்பின் தலைவர் பிரதீப் குப்தா என்டிடிவி ஊடகத்திற்குப் பேட்டியளித்தார். அப்போது, தங்களது நிறுவனத்தின் கணிப்புகள் குறித்து அவர் கூறியதாவது:தமிழகத் தேர்தலில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், அவர் வெற்றியை நோக்கி நகருவார் என்றும் நாங்கள் கணிப்புகளை வெளியிட்டோம்.




ஆனால், ஆரம்பத்தில் எங்களுடைய இந்தத் துணிச்சலான கணிப்பைக் கண்டு அரசியல் விமர்சகர்களும், மற்றவர்களும் எங்களை நோக்கிச் சிரித்தார்கள். எங்களை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் கேலி செய்தார்கள், ஆனால், எதிர்ப்புகளையும் விமர்சனங்களையும் கண்டு நாங்கள் பின்வாங்கவில்லை.தரவுகளின் அடிப்படையில் மக்கள் மனநிலையை நாங்கள் துல்லியமாக ஆய்வு செய்தோம். இன்று தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில், மக்கள் எங்கள் கணிப்புக்கு ஆதரவாகத்தான் வாக்களித்துள்ளனர் என்பது உறுதியாகியுள்ளது.

எங்களை எள்ளி நகையாடியவர்கள் இப்போது மவுனமாகி விட்டனர். தமிழகத்தில் ஒரு புதிய அரசியல் சக்தியின் வருகையைத் எங்களது நிறுவனம் முன்கூட்டியே உணர்ந்திருந்தது. அது இப்போது உண்மையாகியுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# “திமுக கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் தவெகவுக்கு ஆதரவு கொடுக்காது” வைகோ நம்பிக்கை

சென்னை:மே 06-

“திமுக கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் தவெகவுக்கு ஒருபோதும் ஆதரவு கொடுக்க மாட்டார்கள் என்பது எனது திடமான கருத்தாகும்” என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.சென்னை அறிவாலயத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, “இந்த தேர்தலில் திமுகவை விட தவெகவுக்கு அதிக இடங்களை கொடுத்த மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம். தவெக



ஆட்சியமைக்க இன்னும் 10 எம்எல்ஏக்கள் ஆதரவு தேவை. எங்களிடம் அவர்கள் ஆதரவு கேட்க வரவே மாட்டார்கள். நாங்கள் மிகவும் உறுதிப்பாட்டோடு திமுக கூட்டணியில் நீடிக்கிறோம்.

எங்கள் கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியோடும் தவெக தொடர்பு வைத்ததாக தெரியவில்லை, தொடர்பு வைக்கவும் முடியாது. இந்த கூட்டணியில் உள்ள யாரும் அசைகின்ற மனநிலையில் இல்லை.

மக்களின் தீர்ப்பு என்பது ஜனநாயகத்தில் மதிக்கப்பட வேண்டியது. திமுக ஆட்சியில் நடந்த அரும்பெரும் சாதனைகளை தொடர வேண்டிய கடமை புதிதாக அமையும் அரசுக்கு உள்ளது.திமுக கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் தவெகவுக்கு ஒருபோதும் ஆதரவு கொடுக்க மாட்டார்கள் என்பது எனது திடமான கருத்தாகும்” எனத் தெரிவித்துள்ளார்.



# தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,440 சரிவு: இன்றைய விலை நிலவரம் என்ன?

## தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது

சென்னை:மே 06-

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலையில் (மே 5) பவுனுக்கு ரூ.1,440 என குறைந்தது. வெள்ளி விலையும் கிலோவுக்கு ரூ.5,000 என சரிந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஏற்ற இறக்கத்துடன் இருந்து வருகிறது. தங்கம் விலை கடந்த 1ம் தேதி அன்று பவுனுக்கு ரூ.1,440 என குறைந்தது. அதற்கு மறுநாளான 2ம் தேதி அன்று தங்கம் விலை பவுனுக்கு ரூ.640 என விலை உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சூழலில், தங்கம் விலை இன்று குறைந்துள்ளது. சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.180 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,820க்கும், பவுனுக்கு ரூ.1,440 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,10,560க்கும் விற்பனையாகிறது.

24 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.196 என விலை குறைந்து, ஒரு கிராம் ரூ.15,077க்கும், 18 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.150 என விலை குறைந்து, ஒரு கிராம் ரூ.11,530க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில் இன்று கிராமுக்கு ரூ.5 குறைந்து, ஒரு கிராம் ரூ.265க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.5,000 குறைந்து, ஒரு கிலோ ரூ.2,65,000க்கும் விற்பனையாகிறது.

# “தம்பி விஜய் தலைமையிலான தவெக அரசுக்கு வாழ்த்துகள்” சீமான்

சென்னை:மே 06-

“பொறுப்பேற்கவுள்ள தம்பி விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக புதிய அரசுக்கு என்னுடைய வாழ்த்துகள்” என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் “அண்மையில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைப் பொதுத் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு வாக்களித்த தாய்த்தமிழ்



உறவுகள் அனைவருக்கும் என்னுடைய உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.வெற்றிபெற்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பொறுப்பேற்கவுள்ள தம்பி விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக புதிய அரசுக்கும் என்னுடைய வாழ்த்துகள். தமிழர்களின் வரலாற்றுத் தாயகமான தமிழ்நாடு எனும் தாய்நிலத்தின் நலனுக்காகவும், உயர்வுக்காகவும் தொடர்ச்சியாகக் களப்பணியாற்றுவோம்.மண்ணுக்கும், மக்களுக்குமான ஆக்கப்பூர்வ மாற்று அரசியலை பொறுப்புள்ள எதிர்க்கட் சியாய் நின்று நாம் தமிழர் கட்சி செயலாற்றும்” என்று அவர் பதிவிட்டுள்ளார்.

# “திமுக கூட்டணியில் தான் இருக்கிறோம்; அதில் மாற்றமில்லை” பிரேமலதா விஜயகாந்த்

சென்னை:மே 06-

நாங்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில்தான் இருக்கிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், விஜய்யின் தவெக 108 இடங்களைக் கைப்பற்றி இருக்கிறது. இருப்பினும், ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை பலமான 118 இடங்களைப் பெறாததால், தமிழகத்தில் தற்போது ‘தொங்கு சட்டப்பேரவை’ அமையும் சூழல் உருவாகி



யுள்ளது. இந்நிலையில், ஆட்சி அமைக்க இன்னும் 10 இடங்கள் தேவைப்படுவதால், தேமுதிக, விசிக உள்ளிட்ட மற்ற கட்சிகளிடம் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்புள்ளது.இந்நிலையில், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா செய்தியாளர்களிடம் பேசும்போது, “புதிதாக வந்திருக்கும் விஜய்க்கு எனது வாழ்த்துகள். நாங்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில்தான் இருக்கிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை.விஜய் எங்கள் வீட்டு பிள்ளை. அவருக்கு வாழ்த்துகள். விஜய் எங்களுக்கு புதியவர் இல்லை. அவர் இப்போதுதான் அரசியலுக்கு வந்திருக்கிறார். மக்களுக்கு நல்லது செய்யப்பட்டும்” இவ்வாறு அவர் கூறினார்.

# பழநி அருகே கோயில் திருவிழாவில் பக்தர்களுக்கு ‘கறி விருந்து’

பழநி::மே 06-

திண்டுக்கல் மாவட்டம் பழநி அருகே கோம்பைபட்டியில் பெரியதுரை மற்றும் கருப்பணசுவாமி கோயில் திருவிழாவில் பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய 300 ஆடுகளை சமைத்து இன்று (செவ்வாய்கிழமை) 10,000 பேருக்கு ‘கறி விருந்து’ நடைபெற்று வருகிறது. பழநி அருகேயுள்ள கோம்பைபட்டியில் பெரியதுரை, கருப்பணசுவாமி, செல்வ விநாயகர், தன்னாசியப்பன், பொலக்கருப்பு கோயில் திருவிழா ஆண்டுதோறும் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு திருவிழா நேற்று (மே 4) தொடங்கியது.

நேற்று மாலை 6 மணிக்கு தீர்த்தக் கலசம், குதிரை மற்றும் கருப்பணசுவாமி சிலை ஊர்வலமாக கோயிலுக்கு கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து,



இரவு 7 மணிக்கு தீர்த்தம் செலுத்துதல் மற்றும் அன்னதானம் நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வாக இன்று (மே 5) கருப்பணசுவாமிக்கு கிடா வெட்டுதல் நிகழ்வு நடைபெற்றது.தையொட்டி, அதிகாலை 3 மணி முதல் பக்தர்கள் ஆடு, அரிசி, பால் உள்ளிட்டவற்றை காணிக்கையாக செலுத்தினர். மொத்தம் 300 ஆடுகள் பக்தர்களிடம் இருந்து காணிக்கையாக பெறப்பெற்றன. பின்னர் இவற்றைக் கொண்டு உணவு சமைக்கும் பணி கோயில் வளாகத்திலேயே நடைபெற்று வருகிறது.

சமைக்ஷியலுக்கு தேவையான பொருட்களை வழங்கியதோடு, சமையல் செய்யும் பணியில் பக்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர். காலை 11 மணிக்கு முதல் மெகா 'கறி விருந்து' தொடங்கி நடைபெற்று வருகிறது. இதையொட்டி, சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்றனர். மொத்தம் 10,000 பக்தர்களுக்கு விருந்து தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான, ஏற்பாடுகளை கிராமத்தினர் செய்திருந்தனர்.

## மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வெற்றி

# தமிழக வெற்றிக் கழகம் சார்பில் வாக்காளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றி!

மானாமதுரை மே 06-

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் மானாமதுரை தொகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்துள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வு எழுச்சியுடன் நடைபெற்றது.சட்டமன்ற உறுப்பினருக்கு வாழ்த்து:மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் வெற்றி வாகை சூடி, புதிய சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அகரம் துரை இளங்கோவனுக்கு மானாமதுரை மேற்கு ஒன்றியம் சார்பாக மலர்




மாலை அணிவித்து சிறப்பான முறையில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. தொண்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் நன்றி:

இந்த மகத்தான வெற்றியைச் சாத்தியமாக்கிய மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், இரவு பகல் பாராது களப்பணியாற்றிய கழகத் தொண்டர்கள் மற்றும் மாற்றத்தை விரும்பி வாக்களித்த பொதுமக்கள் என அனைவருக்கும் கழகத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகள் சமர்ப்பிக்கப்பட்டது. நிர்வாகிகளின் எழுச்சி உரை:இந்த வெற்றி குறித்து மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் பேசுகையில்,

"சிவகங்கை சீமையை வீரமங்கை வேலுநாச்சியாருக்குப் பிறகு, நமது கொள்கைத் தலைவியின் வழியில் தீய சக்திகளிடமிருந்து மீட்டெடுத்துள்ளோம். சிவகங்கை மண்ணை தமிழக வெற்றிக் கழகத்தின் அசைக்க முடியாத கோட்டையாக மாற்றிய பெருமை நம் கழக வீரர்களையே சாரும்," என நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டனர்.இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் மானாமதுரை மேற்கு ஒன்றிய தமிழக வெற்றிக் கழகத்தினர் உற்சாகத்துடன் இனிப்புகள் வழங்கி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161